வெசாக் பௌர்ணமி போயா தினத்தை முன்னிட்டு சனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் 728 சிறைக் கைதிகள் மற்றும் அனுமதிப் பத்திரத்தின் அடிப்படையில் 34 சிறைக் கைதிகளை விடுதலை செய்யும் அரச வைபவம் அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் தலைமையில் வெலிக்கடை சிறைச்சாலை விளையாட்டு மைதானத்தில் 2019.05.18 ஆம் திகதி அதாவது வெசாக் பௌர்ணமி போயா தினத்தன்று இடம்பெற்றது.

2.2 மரண தட்டனை விதிக்கப்பட்டுள்ள கைதியொருவர் சிறைச்சாலையில் இருக்கும் போது தனது கலைப் பட்டத்தைப் பெற்றுக் கொள்ளல்.

மரண தண்டனை விதிக்கப்பட்டு வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் தனது கலைப்பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்த முன்னாள் உப பொலிஸ் பரிசோதகரான திரு. இந்திக பமுணுசிங்ஹ என்ற சிறைக் கைதி 2019.07.18 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற களனிப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவின் போது சமூக விஞ்ஞானம் தொடர்பான கலைப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

இது இந்நாட்டின் சிறைச்சாலை வரலாற்றில் சிறைக்கைதியொருவர் பட்டம் பெற்றுக் கொண்ட முதல; தடவையென்பதோடு, உலக சிறைச்சாலை வரலாற்றினுள் சிறைக்கைதிகள் நான்கு பேர் சிறையில் இருக்கும் போது இவ்வாறு பட்டம் பெற்றுக் கொண்டுள்ளதோடு இந்திக பமுணுசிங்ஹ அவ்வாறு சித்தியடைந்த ஐந்தாவது நபராவார். அவர் 2017 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதத்தில் சிறைச்சாலை சட்ட விதிகளுக்கு உட்பட்டதாக களனிப் பல்கலைக் கழகத்தின் மேற்பார்வையின் கீழ் வெலிக்கடை சிறைச்சாலையில் நடாத்தப்பட்ட விசேட பரீட்சை நிலையத்திலிருந்து பரீட்சைக்குத் தோற்றி இந்த விஷேட ஆற்றலை வெளிப்படுத்தியுளளார்.

2.3 நாடு முழுவதிலும் உள்ள சிறைச்சாலை நிறுவனங்களின் கலைததிறன் வெளிக்காட்டப்பட்ட சிறைக் கைதிகளின் மறைந்திருந்த வனப்பு மேடையேறிய இரவு " லலித சிற சர "

நாட்டின் சகல சிறைச்சாலைகளிலும் நீண்ட காலமாக சிறையில் அடைக்கப்பட்டுள்ள சிறைக் கைதிகளின் கலைத் திறமைகளை மேம்படுத்தும் நோக்கிலும் மற்றும் புனரமைக்கப்பட்ட நல்லொழுக்கமான பிரசைகளாக அவர்களை சமூகமயப்படுத்தும் நோக்கிலும் " லலித சிற சர "" என்ற பெயரில் இசைக் கச்கேரியொன்று கௌரவ அதிதிகள் பலரின் பங்கேற்புடன் 2019 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 08 ஆந் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்டது. இந்தக் கச்சேரியில் 101 கைதிகள் கலந்து கொண்டதோடு அவர்களில் 12 பேர் பெண் கைதிகளாவர். இவற்றில் வெளிநாட்டுப் பெண்கள் 4 பேர் கலந்து கொண்டமை விசேட அம்சமாகும். புகழ்பெற்ற பாடகர்கள், இசைக் கலைஞர்கள் மற்றும் நடனக் கலைஞர்கள் எனப் பலரும் அலுவலர்கள் சிலரும் இவ்விசைக் கச்கேரிக்கு தங்கள் பங்களிப்பை வழங்கினர்.

2.4 சிறைக் கைதிகள் நலனோம்பல் தினத்தை முன்னிட்டு முதலாவது கொடியை அணிவித்தல்.

சிறைக் கைதிகள் நலனோம்பல் தினத்தை முன்னிட்டு முதலாவது கொடி மேன்மை தங்கிய சனாதிபதி அவர்களுக்கு அணிவிக்கும் நிகழ்வு 2019 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 10 ஆம் திகதி சனாதிபதி செயலயத்தில் நடாத்தப்பட்டதோடு அதற்கு அதிமேதகு சனாதிபதி அவர்களும், நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு கௌரவ அமைச்சர் தலதா அத்துகோரால அவர்களும் மற்றும் சிறைக் கைதிகள் நலனோம்பல் சங்கத்தின் கௌரவ உப தலைவர் முன்னாள் மக்கள் பிரதிநிதி ஆர்.ஏ.டீ. சிறிசேன அவர்களும் கலந்து கொண்டனர்.

2.5 “வழி தவறிய நபர்களை நல்வழிப்படுத்தி சமூகமயப்படுத்தல் ” என்ற பெயரில் நடாத்தப்பட்ட கப்ருக் பூஜை.

“வழி தவறிய நபர்களை நல்வழிப்படுத்தி சமூகமயமாக்கல்” என்ற மகுடத்தில் ஐந்நூறு சிறைக் கைதிகளின் பங்களிப்புடன் சிறப்புமிக்க ஜயஸ்ரீ மஹா போதிக்கருகில் நடாத்தப்பட்ட போதி பூஜை மற்றும் ருவன்வெலிசாயாவிற்கு அருகில் நடாத்தப்பட்ட கபருக் பூஜை புண்ணிய கரும நிகழ்வு 2019.09.15 ஆம் திகதி சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் அவர்களின் பங்களிப்புடன் மற்றும் அனுராதபுரம் சிறைச்சாலையின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்டது..

2.6 சிறைச்சாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி

சிறைச்சாலை திணைக்கள அலுவலர்களின் பிரதான விளையாட்டு விழாவான சிறைச்சாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் விளையாட்டு விழா 2019.10.05 மற்றும் 06 ஆகிய இரு தினங்களில் நாட்டின் சிறைச்சாலை நிறுவனங்களின் 1000 பேர் வரையான விளையாட்டு வீர, வீராங்கனைகளின் பங்களிப்புடன் அங்குனகொலபெலெஸ்ஸ சிறைச்சாலை விளையாட்டரங்கில் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தின் தலைமையில் நடாத்தப்பட்டது. இம்முறை புதிய தும்பர சிறைச்சாலை வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

2.7 சிறைச்சாலை கைதிகளுக்காக நடாத்தப்பட்ட இளைஞர் முகாம்.

நாட்டின் ஊழியர் படையில் உள்ளடங்குகின்ற மற்றும் நாட்டின் உயிர் நாடியான இளைஞர் சமூகத்திற்கு உரிய பல்வேறு தவறுகளின் அடிப்படையில் சிறைப்படுத்தப்பட்ட 17 - 35 வயதிற்கு இடைப்பட்ட சிறைக் கைதிகளை புனர்வாழ்வளித்து சிறந்த நபர்களாக சமூகமயப்படுத்தும் செயற்பாடுகளுக்குரிய ஒரு நிகழ்ச்சித் திட்டமொன்றாக " சிறகுகள் " இளைஞர் முகாம் பல்லேகல திறந்தவெளி வேலை முகாமில் 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 - 18 ஆகிய மூன்று நாட்கள் முழுவதும் 100 இளம் கைதிகளின் பங்களிப்புடன் நடாத்தப்பட்டன.

2.8 வருடாந்த சாரணர் முகாம்.

வருடாந்த வதிவிட சாரணர் முகாம் மற்றும் ஜம்போரீ இம்முறை தல்தென சிறைச்சாலையில் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 மற்றும் 16 ஆகிய இரு தினங்களில் தல்தென இளம் தவறாளிகளின் சீர்திருத்த மத்திய நிலையத்தில் நாடு முழுவதிலும் உள்ள சிறைச்சாலை நிறுவனங்களின் 375 சிறைக்கைதிகளின் பங்களிப்புடன் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தின் தலைமையில் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- **<u>வெற்றிகள் /அடைவுகள்</u>**

1. 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாண சிறைச்சாலையில் நிர்மாணக் கருத்திட்டத்தின் இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகள் வெற்றிகரமாக பூர்த்திசெய்யப்பட்டு சிறைக்கைதிகளை தடுத்துவைக்கக்கூடிய சகல வசதிகளும் கொண்ட ரிமான்ட சிறைச்சாலையாக 2019 ஆம் ஆண்டில் மேற்படி கருத்திட்டதின் பௌதீக வேலைகள் நிறைவுசெய்யப்பட்டன.

2. பூஸா சிறைச்சாலையின் விசேட வகை சிறைக்கைதிகள் 46 பேரை தடுத்து வைக்கக் கூடிய நிலையமாக மேலும் அபிவிருத்தி செய்வதற்குச் சாத்தியம் கிடைத்தது.

3. பல்லேகலையில் அமைந்துள்ள புதிய தும்பர சிறைச்சாலையின் சிறைச்சாலை வைத்தியசாலை, கைத்தொழில் பிரிவு ஆகியவற்றின் நிர்மாணப் பணிகளை நிறைவுசெய்யப்பட்டன.

- **<u>சவால்கள்</u>**

1. அதிகரித்த விளக்கமறியற் சிறைக்கைதிகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்களின் விடுதி மற்றும் பெரக் ஆகியன அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது.

2. வெலிக்டை மற்றும் களுத்துறை சிறைச்சாலைகளில் தற்போது காணப்படுகின்ற கட்டிடம் (தரமற்றது என்பதால் பயன் பாட்டிலிருந்து கைவிடப்பட்ட) பழுதுபார்ப்பதற்கு வருடாந்தம் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் குறித்தொதுக்கப்படுகின்ற ஒதுக்கீட்டுத் தொகை போதுமனதல்ல என்பதோடு அதற்கு உரியதாக தனியான ஒதுக்கீட்டை குறித்தொதுக்கிக் சிறைக்கைதிகளின் உயிர்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக உள்ள மிகவும் உடைந்த கட்டிடங்களை இராணுவத்தினர் அல்லது சிவில் பாதுகாப்புப் படையணி மூலம் உரிய தரம்கொண்டதாக திருத்துவதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டியள்ளது.

- **<u>எதிர்கால அடையிலக்குகள்</u>**

❖ மாத்தறை சிறைச்சாலையை இடமாற்றும் நிகழ்ச்சித் திட்டத்திற்குரியதாக மாத்தறை கொட்டுவையினுள் காணப்படுகின்ற ரிமான்ட் சிறைச்சாலையை கொட்டவிலவத்தை புதிய நீதிமன்றத் கட்டிடத்தொகுதிக்கு அருகில் 3.1038 ஹெக்டெயார் நிலப்பரப்புடைய காணியில் நிருமாணிப்பதற்கான தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் கொள்கை ரீதியான இனக்கப்பாடு 2016 ஆம் ஆண்டு பெறப்பட்டதோடு அது தொடர்பான 2018.08.06 ஆம் திகதிய அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பிரகாரம் 2950 மில்லியன் ரூபா மதிப்பீட்டின் கீழ் 2019 – 2021 இடைக்கால வரவு செலவுத் திட்டச் சட்டகத்தினுள் நிருமாணித்து நிறைவு செய்வதற்கு உரித்துடையதாயினும் 2019/2020 வரவு செலவுத் திட்டத்தின் கீழ் கோரிய ஒதுக்கீடு அங்கீகரிக்கப்படாமை. ஆதலால் 2021 திட்டமிடல் மற்றும் நிருமாணத்திற்குத் தேவையான ஒதுக்கீட்டை அனுமதித்துக் கொண்டு கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

- வாரியபொல சிறைச்சாலையை விஸ்தரிக்கும் கருத்திட்டத்திற்காக 2017 ஆம் ஆண்டு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் கொள்கை ரீதியான இனக்கப்பாடு கிடைக்கப்பெற்றதோடு அதற்கு அமைச்சரவையின் அமைப/ 18/1617/834/018 ஆம் இலக்க மற்றும் 2018.08.08 ஆம் திகதியிடப்பட்ட அனுமதி 2020 - 2023 இடைக்கால வரவு செலவுத் திட்டச் சட்டகத்தினுள் 1244. 6 மில்லியன் ரூபா வரவு செலவுத்திட்ட மதிப்பீடுக்கு சமர்ப்பிக்கவிருந்த போதிலும் கடந்த வரவு செலவுத் திட்டத்தின் போது அதற்கு ஒதுக்கீட கோரிய போதிலும் ஒதுக்கப்படவில்லை. எனவே இடநெருக்கடி காணப்படுகின்ற மேற்படி சிறைச்சாலை விஸ்தரிப்பதற்கான ஒதுக்கீட்டை 2021 கீழ் மேற்கொள்வதற்காக குறித்தொதுக்கிக் கொள்ளல்.

- சிறைக்கைதிகள் தகவல் முறைமைக்குரிய எஞ்சியுள்ள 13 சிறைச்சாலை நிறுவனங்களை வலையமைப்பு செய்தல் மற்றும் தற்போது அந்த முறைமையை செயற்படுத்தும் போது ஏற்படுகின்ற முறைமையின் தொழில்நுட்ப பிரச்சினைகளைத் தீர்த்தல் தொடர்பாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்தின் தலையீட்டைப் பெற்றுக் கொள்ளல்.

- பல்லேகல சிறைச்சாலையை முழுமையாக முடிப்பதற்குத் தேவையான எஞ்சியுள்ள சிறைக் கட்டிடத்தை நிர்மாணித்தல் மற்றும் ஏனைய சேவைகளை வழங்குவதற்காக எதிர்வரும் வருடங்களில் அதற்குரிய ஒதுக்கீட்டைக் குறித்தொதுக்கிகொள்ளல்.

- அகுனகொலபெலெஸ்ஸ தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்புச் சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற நீர் வழங்கல் கருத்திட்டத்தை 2020 ஆம் ஆண்டில் நிறைவு செய்வதற்கும் அதன் எஞ்சியுள்ள பற்றுச் சீட்டுக்களைக் கொடுப்பனவு செய்வதற்கான ஒதுக்கீட்டை 2021 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்வதற்கான ஒதுக்கீட்டை ஒதுக்கிக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- சிறைச்சாலை நிறுவனங்களுக்குள் கொண்டுவரப்படுகின்ற பல்வேறுபட்ட தடைசெய்யப்பட்டுள்ள பொருட்களைப் பிடிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற சம்பிரதாய ஆட்கள் பரிசோதனைக்குப் பதிலாக தொழில்நுட்ப வழிமுறையாக CCTV கெமரா கண்காணிப்பு முறைமையை பிரதான சிறைச்சாலை நிறுவனங்களான கொழும்பு வளாகம்/ களுத்துறை/ நீர்கொழும்பு/ மஹர/ தும்பர/ காலி ஆகிய சிறைச்சாலை நிறுவனங்களில் தாபிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். மேலும் பொதிகள் ஸ்கேனர், உடல் ஸ்கேனர் (பொடி ஸ்கேனர்), மற்றும் Walk through தேவையான பிரதான சிறைச்சாலை நிறுவனங்களுக்கு வழங்குதல்.
- மெகஸின் சிறைச்சாலையில் இடவசதிகள் உள்ள இடங்களில் கட்டிடங்கள் பலவற்றை நிருமாணித்தல்.

- வட்டரெக்க சிறைச்சாலை காணியில் சகல வசதிகளும் கொண்ட ரிமான்ட சிறைச்சாலையொன்றை நிருமாணித்தல் - ஹோமாகம/ கடுவெல/ கங்கொடவில/ ஹொரனை/ அவிஸ்ஸாவெல்லை/ கெஸ்பாவ/மொரட்டுவை/ ருவன்வெல்லை ஆகிய நீதிமன்றங்களின் பாதுகாப்புக்காக உள்ள சிறைக்கைதிகளை இங்கு தடுத்து வைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இது தொடர்பான பூர்வாங்க அனுமதி 2019 ஆம் ஆண்டில் அமைச்சலைப் பத்திரம் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

- சிறைச்சாலை சேவையை தொழில்சார் சேவையாக மாற்றியமைப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள சேவைப் பிரமாணக் குறிப்குத் தேவையான அனுமதியைப் பெற்றுக் கொள்ளல்.

- சிறைச்சாலை உளவு மற்றும் பாதுகாப்புப் பிரிவை விதிமுறைப்படுத்தி வலுவூட்டுதல்.

- பூஸா சிறைச்சாலையில் 200 சிறைக் கைதிகளை தடுத்து வைக்கக் கூடிய வகையில் அதியுயர் பாதுகாப்புச் சிறைச்சாலையாக அதனை மாற்றியடைத்தல்.

- அதியுயர் பாதுகாப்புச் சிறைச்சாலைகள் அனைத்திற்காகவும் தொலைபேசி சமிஞ்சை தடைகளைத் தாபித்தல்.

- வீடியோ வழித் தொடர்பாடல் முறைமையை அதியுயர் பாதுகாப்புச் சிறைச்சாலைகளின் நீதிமன்ற அலுவல்கள், விருந்தினர்களுக்கு காட்டுதல் என்பவற்றுக்காக அறிமுகம் செய்தல்.

எச்.எம்.ரீ.என். உபுல்தெனிய.

சிறைச்சாலை ஆணையாளர் நாயகம்.

H.M.T.N. Upuldeniya
Commissioner Genaral of Prisons
Prison Headquarters
Colombo 09.

அத்தியாயம் 03 - 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான நிதிச் செயலாற்றுகை.

3.1. நிதிச் செயலாற்றகைப் பற்றிய கூற்று .

ஏசீஏ – எப்

ரூபா

வ. செ. திட்டம் 2019		குறிப்பு	உண்மை 2019	2018	
-	**வருமானப் பெறுகைகள்**		67,988,050	60,586,494	
-	வருமான வரி	1	-	-	ஏசீஏ - 1
-	உள்ளூர் பொருட்கள், சேவைகளுக்கான வரி	2	-	-	
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரி	3	-	-	
	வரியல்லா வருமானம் மற்றும் பிற	4	-	-	
70,000,000	தொழி. விவ. முற்பணக் கணக்கு	5	67,988,050	60,586,494	
70,000,000	**மொத்த வருமான பெறுகைகள் (அ)**		**67,988,050**	**60,586,494**	
-	**வருமானமல்லாத பெறுகைகள்**		**6,486,564,858**	**6,006,702,486**	
6,355,663,000	திறைசேரி முற்பணம்		5,969,746,949	5,494,990,530	ஏசீஏ - 3
136,000,000	வைப்புகள்		40,898,06	57,943,324	ஏசீஏ - 4
180,000,000	முற்பணக் கணக்குகள்		311,928,563	304,586,196	ஏசீஏ -5/5 (ஏ) /5 (பி)

35,000,000	வேறு பெறுகைகள்		163,991,285	149,182,435	
6,706,663,000	**மொத்த வருமானமல்லாத பெறுகைகள் (ஆ)**		**6,486,564,858**	6,006,702,486	
	மொத்த வருமான பெறுகைகள் மற்றும் வருமானமல்லாத பெறுகைகள்				
6,776,663,000	**இ = (அ) + (ஆ)**		**6,554,552,908**	6,067,288,98	
	கழி: செலவினம்				
-	**மீண்டெழும் செலவினம்**		-	-	
3,849,000,000	வேதனாதிகள், சம்பளங்கள், பிற ஊழிய நன்மைகள்	**5**	3,571,300,854	3,393,992,383	
1,967,600,000	ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள்	**6**	2,161,705,342	1,748,824,638	**ஏசீஏ - 2 (ii)**
	உதவு தொகை, மானியம் மற்றும் மாற்றல்கள்	**7**	25,994,543	26,729,528	
28,500,000	வட்டிக் கொடுப்பனவுகள்	**8**			
88,500,000	ஏனைய மீண்டெழும் செலவினம்	**9**	-		
5,933,600,000	**மொத்த மீண்டெழும் செலவினம் (ஈ)**		**5,759,000,739**	5,169,546,549	
	மூலதனச் செலவினம்				
82,080,000	மூலதன சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு	**10**	58,012,936	55,563,599	
475,900,000	மூலதனச் சொத்துக்களை கையகப்படுத்தல்	**11**	377,395,152	358,886,949	
	மூலதன மாற்றல்கள்	**12**			**ஏசீஏ - 2 (ii)**
	மூலதனச் சொத்துக்களை கையகப்படுத்துதல்	**13**			

	திறன் மேம்பாடு				
7,000,000		14	5,164,110	5,038,750	
303,500,000	பிற மூலதன செலவுகள்	15	11,069,485	3,436,004	
868,480,000	**மொத்த மூலதன செலவினம் (உ)**		**451,641,682**	**422,925,301**	
	பிரதான பேரேட்டு செலவுகள் (ஊ)		312,102,999	443,718,200	
	வைப்புக் கொடுப்பனவு		35,164,448	146,514,007	**ஏசீஏ - 4**
280,000,000.00	**முற்பணக் கொடுப்பனவு**		276,938,551	297,204,193	**ஏசீஏ - 5/5 (ஏ) /5 (பி)**
	மொத்த செலவினம்				
	எ = (ஈ + உ + ஊ)		6,522,745,420	6,036,190,050	
	2019 திசெம்பர் 31 இல்				
13,578,743,000	**முற்பண மீதி ஏ = (இ - எ)**		**31,807,488**	**31,098,930**	

3.3 நிதி நிலைமை பற்றிய கூற்று

ஏசீஏ - பீ

2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமை பற்றிய கூற்று

	குறிப்பு	உண்மை 2019 ரூபா.	2018 ரூபா
நிதி அல்லாத சொத்துக்கள்			
சொத்து, பொறித்தொகுதி உபகரணம்	ஏசீஏ - 6	8,942,715,063	8,475,769,546
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ - 5/5 (ஏ)	254,437,915	289,427,926
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ - 3	373,235	
மொத்த சொத்துக்கள்		**9,197,526,213**	**8,765,197,472** #
நிகர சொத்து / பங்கு			
நிகர சொத்து		136,700,992	177,414,616
சொத்து, பொறித்தொகுதி உபகரண ஒதுக்கு		8,942,715,063	8,475,769,545
வாடகை, பணி முற்பண ஒதுக்கு	ஏசீஏ – 5 (பி)		
நடைமுறை பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்கு	ஏசீஏ - 4	117,736,923	112,013,309
முற்பண மீதி	ஏசீஏ - 3	373,235	
மொத்த பொறுப்புக்கள்		**9,197,526,213**	**8,765,197,472** #

மேலே பக்க இல 05 தொடக்கம் பக்க இல 37 வரை உள்ள ஏ.சி.ஏ 01 தொடக்கம் ஏசீஏ 06 வரையான படிவங்களில் சமர்ப்பிக்கப்பட்ட விரிவான கணக்கு அறிக்கைகள் மற்றும் பக்க இல 38 முதல் பக்க இல 133 வரையான பக்கங்களில் வழங்கப்பட்ட கணக்குகளுக்கான குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதிகளாகும். இந்த நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள படி

மிகவும் பொருத்தமான கணக்கியல் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.இறுதிக் கணக்கின் புள்ளிவிவரங்கள், தொடர்புடைய கணக்கியல் குறிப்புகள் மற்றும் பிற கணக்கியல் தகவல்கள் திறைசேரி கணக்கு புத்தகங்களுடன் ஒப்பிடப்பட்டுள்ளதுடன் இந்த புள்ளிவிவரங்களுடன் உடன்படுகின்றன என்பதை நாங்கள் இதன் மூலம் சான்றளிக்கிறோம்.

……..	……	……
பிரதான கணக்கீட்டு அலுவலர்	கணக்கீட்டு அலுவலர்	சிறைச்சாலை ஆணையாளர் (நிதி)
பெயர்: ஜே.ஜே. ரத்னசிறி	பெயர்: டீ.எம்.ஜே.டப். தென்னக்கோன்	பெயர்: :எம்.பீ.எம்.பி.டப்.யூ.ஏ.ராஜசிங்க
பதவி : செயலாளர்	பதவி : சிறைச்சாலை ஆணையாளர் நாயகம்	திகதி : 2020.02.26
திகதி : 2020.02.28	திகதி : 2020.02.26	

J.J. Rathnasiri
Secretary
Ministry of Justice, Human Rights and Legal Reforms

T M.J.W. Thennakoon
Commissioner General of Prisons
Prison Headquarters
Colombo 09.

M.B.M.P.W.U.A. RAJASINGHE
Commissioner of Prison (Finance)
Prison Headquarters
Colombo-09.

3.4 காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

ஏசீஏ - சீ

2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

	உண்மை	
	இவ் வருடம்	கடந்த வருடம்
	ரூபா	ரூபா
தொழிற்பாட்டு நடவடிக்கையிலிருந்து காசுப் பாய்ச்சல்		
மொத்த வரி பெறுகைகள்	-	-
கட்டனம், அபராதம், தண்டப்பணம், உரிமங்கள்	-	-
இலாபம்	231,979,335	-
வருமானமல்லாத பெறுகைகள்	-	-
வேறு திணைக்களங்கள்/ அமைச்சு மூலம் சேகரிக்கப்பட்ட வருமானம்	-	-
முற்பணம் கிடைப்பனவு	5,969,746,946	5,654,341,077
தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (அ)	**6,201,726,285**	**5,654,341,077**
கழி - காசு செலவிடல்:	-	-
ஆள்சார் வேதனாதிகள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவு	5,730,365,380	5,135,555,085
மானியம் மற்றும் மாற்றல் கொடுப்பனவுகள	25,994,543	26,729,528
பிற செலவினத் தலைப்புகளுக்கான செலவினம்	4,828,502	
திறைசேரிக்கு செலுத்தப்பட்ட முற்பணம்	30,086,253	23,836,995
தொழிற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (ஆ)	**5,791,274,679**	**5,186,121,608**
தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல் (இ) = (அ) - (ஆ)	**410,451,606**	**468,219,469**
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்டமொத்த காசு		
வட்டி	-	-
பங்கிலாபம்	-	-

சொத்து விற்பனை, பௌதிக ஆதன விற்பனை	-	-
கடன் அறவீடுகள்	-	-
முற்பணம் அறவீடுகள்	310,266,620	422,925,301
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்டகாசு (ஈ)	**310,266,620**	**422,925,301**
கழி - காசு செலவிடல்:		
பௌதிக சொத்து கொள்வனவு அல்லது நிர்மானம் அல்லது வேறு முதலீடுகளை கையகப்படுத்தல்	451,641,682	-
முற்பணம் கொடுப்பனவு	161,094,290	-
முதலீட்டு செயற்பாட்டுக்காக செலவிடப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் - (உ)	**726,451,839**	**-**
முதலீட்டு செயற்பாட்டிலிருந்து தேறிய காசு (ஊ) = (ஈ) -(உ)	**(416,185,219)**	**(422,925,301)**
தொழிற்பாட்டு மற்றும் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு (எ) = (இ) + (ஊ)	**(5,733,613**	**-**
நிதி செயற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்		
உள்நாட்டுக் கடன் பெறுகை	-	-
வெளிநாட்டுக் கடன் பெறுகை	-	-
பெறப்பட்ட மானியங்கள்	-	-
வைப்புக் கிடைப்பனவுகள்	40,898,061	-
நிதி செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்டமொத்த காசு (ஏ)	**40,898,061**	**-**
கழி - காசு செலவிடல்:		
உள்நாட்டுக் கடன் பெறுகை மீள் கொடுப்பனவு	-	-
வெளிநாட்டுக் கடன் பெறுகை மீள் கொடுப்பனவு	-	-
வைப்புக் கொடுப்பனவு	35,164,448	45,294,168
நிதி செயற்பாடுக்காக செலவிடப்பட்ட மொத்த காசு (ஐ)	**35,164,448**	**45,294,168**
நிதி செயற்பாடிலிருந்து பெறப்பட்ட தேறிய காசு (ஒ) = (ஏ) - (ஐ)	**5,733,613**	**(45,294,168)**

காசில் தேறிய மாற்றம் (ஓ) = (எ) - (ஒ)	-	**45,294,168**
சனவரி 01 ஆம் திகதியன்று ஆரம்ப காசு மீதி	-	-
திசெம்பர் 31 ஆம் திகதியன்று இறுதி காசு மீதி	-	-

3.5. நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

3.6. வருமானம் சேகரிப்பு செயலாற்றுகை

ரூபா , 000

வருமானக் குறியீடு	வருமான குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		அரம்ப மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை (ரூபா)	இறுதி வருமான மதிப்பீடு %
2001.04.00	தொழிநுட்ப , விவசாய முற்பணக் கணக்கு	70,000,000	70,000,000	67,988,050	97.12

3.7 குறித்தொதுக்கப்பட்ட ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

ரூபா , 000

ஒதுக்கீட்டு வகை	குறித்தொதுக்கப்பட்ட ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டு பயன்பாடு
	அரம்ப ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
மீண்டெழும்	5,614,500,000	5,933,600,000	5,756,359,923	97.01
மூலதனம்	323,000,000	545,480,000	451,641,682	82.79

3.8 நி.பி . குறிப்பு 208 இன் பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களத்திற்கு / மாவட்டச் செயலகத்திற்கு / மாகாண சபைக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள்

ரூபா ,000

தொடர் இல.	ஒதுக்கீடு பெறப்பட்ட அமைச்சு / திணைக்களம்	ஒதுக்கீட்டு நோக்கம்	ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டு பயன்பாடு
			அரம்ப ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
01	புகையிரதத் திணைக்களம்	புகையிரத பற்றுச் சீட்டுக்களை சீராக்கம் செய்தல்	4,840,815	4,840,815	4,840,815	100

3.9 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை

ரூபா 000

ஆதனக் குறியீடு	குறியீட்டு விபரம்	2019.12.31 ஆம் திகதிக்கு பண்டக் கணக்கெடுப்பு அறிக்கையின் படி மீதி	2019.12.31 ஆம் திகதிக்கு நிதி நிலைமை அறிக்கையின் படி மீதி	எதிர்காலத்தில் கணக்கிட வேண்டியது	அறிக்கையிடல் முன்னேற்றம் %
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்பு	-	7,665,461,250		
9152	இயந்திரம் மற்றும் உபகரணம்	-	908,613,854		
9153	காணி	-	450,460,750		
9154	அருவமான சொத்துக்கள்	-			
9155	உயிரியல் சொத்துக்கள்	-			
9160	நடைபெறும் பணிகள்	-			
9180	குத்தகை சொத்துக்கள்	-			

3.10 - கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை.

சிறைச்சாலைத் திணைக்களத்தின் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி அவர்களின் பொழிப்பு அறிக்கை.

1. **நிதிக் கூற்றுக்கள்**

1.1 முனைப்பளியுள்ள (உண்மை நிலைமை) கணக்கெடுப்புக் கருத்துரை.

சிறைச்சாலை திணைக்களத்தின் 2019 ஆம் ஆண்ட திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு நிதி நிலைமைக் கூற்று, குறித்த திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் நிதிப் பாய்ச்சல் கூற்றுக்கள் அடங்கிய 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணைத்து வாசிக்கப்படவேண்டிய இலங்கை சனநாக சோசலிச குடியரசின் அரசியல் யாப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ளடங்கியுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது கட்டளையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் சிறைச்சாலை திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துத் தெரிவித்தல் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியல் யாப்பின் 154 (6) ஆம் உறுப்புரையுடன் இணைத்து வாசிக்கப்படவேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்க வேண்டிய கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை உரிய நேரத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கடும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படக்கூடிய விளைவுகள் தவிர, 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட மேற்படி நிதிக் கூற்றுக்களில் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு சிறைச்சாலை திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் குறித்த திகதியில் முடிவடையும் வருடத்திற்கான அதன் நிதிச் செயலாற்றுகை மற்றும் நிதிப் பாய்ச்சல் கூற்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு ஏற்ப உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை வெளிக்காட்டுகின்றதென்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 . முனைப்பளியுள்ள (உண்மை நிலைமை) கணக்கெடுப்பு கருத்துரைக்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப (இ. க. நி) ஏற்ப என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு ஆகிய பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றை வழங்குவதற்காக என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சான்றுகள் போதுமானதும் மற்றும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு அலுவலரின் மற்றும் கணக்கீட்டு அலுவலரின் பொறுப்பு.

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இசைவாகவும் மற்றும் உண்மையானதும் மற்றும் நியாயமானதுமான நோக்கொன்றைத் தரக்கூடியவாறும் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்கக் கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரமும் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தயாரிப்பதும் கணக்கீட்டு அலுவலரின் பொறுப்பாகவுள்ளது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்தம் மற்றும் சரியான நேரத்தில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமானவறு தனது வருமானம், செலவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு ஏடுகளையும், அறிக்கைகளையும் பேணி வருதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாடுகளுக்காக செயல்திறன் கொண்ட உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிவரப்படுகின்றதென்பதை கணக்கீட்டு அலுவலர் உறுதிப்படுத்த வேண்டும் என்பதோடு அந்த முறைமையின் பயன்கள் தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு செய்து அதற்கமைய முறைமையைப் பயனுள்ளதாகப் பேணிச் செல்வதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளல் வேண்டும்

1.4. நிதி கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளர் அதிபதியின் பொறுப்பு.

முழுமையான அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் மேசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதென நியாயமான உறுதியொன்றை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடங்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுவது எனது நோக்கமாகும். நியாயமாக சான்றுப்படுத்தல் உயர்மட்ட சான்றுப்படுத்தலொன்று என்றபோதிலும் இலங்கை கணக்காய்வு தரநியமங்களின் பிரகாரம் கணக்காய்வை மேற்கொள்ளும் போதும் அது எப்போதும் பொருண்மையான கூற்றுக்கள் பொய்களற்றகூற்றுக்கள் என உறுதிப்படுத்தப்படுவதில்லை. மோசடி அல்லது தவறு தனியான அல்லது கூட்டான தாக்கம் காரணமாக பொருண்மையான பொய் கூற்றுக்கள் ஏற்பட முடியும் என்பதோடு இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் பொருளாதார முடிவுகளை எடுக்கும்போது அது தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும்.

என்னால் தொழில்முறை நியாயம் மற்றும் தொழில்முறை ஐயுறவான (professional scepticism) வகையில் இலங்கைக் கணக்காய்வு தர நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது.

மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான போலியான கூற்றுக்களின் ஆபத்துக்களை இனங்காணும் போதும் மற்றும் மதிப்பீடு செய்யும் போதும் சமயோசிதமாக உசிதமான கணக்காய்வுத் திட்டங்களை திட்டமிட்டு மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்ந்துக் கொள்வதற்குப் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்வது எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான போலியான கூற்றுக்களினால் ஏற்படுகின்ற பாதிப்புக்களை விட மோசடி காரணமாக ஏற்படுகின்ற பாதிப்புக்கள் முக்கியமானது என்பதோடு, போலியான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே தவற விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவற விடுதல் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாக அமையும்.

- சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வுத் திட்டங்களைத் திட்டமிடுவதற்காக அமைச்சின் உள்ளகக் கட்டுப்பாட்டின் விளைதிறன் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பதற்குக் கருதவில்லை.
- வெளிப்படுத்தல் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான விதத்தில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளனவா என்பதை மதிப்பிடல்.
- பொதுவாக நிதிக் நுற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தில் அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் மற்றும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதென,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டது.

1.5 <u>வேறு சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை.</u>

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்,

(அ). நிதிக் கூற்றுக்கள் கடந்த வருடத்தோடு இனங்கிச் செல்கின்றதென,

(ஆ). கடந்த வருடத்திற்குரிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

பந்தி தொடர்பு	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பரிந்துரை
1.6.1 (இ)	நிதியல்லாத சொத்துக்களை உறுதி செய்து கொள்வதற்காக சொத்துக்கள் ஆவணம் பேணல் மற்றும் இற்றைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதிய 267/2018 ஆம் இலக்க பொது நிருவாக ற்றறிக்கையின் அறிவுறுத்தல்களை பின்பற்றுதல் வேண்டும்.
2.3 (அ)	சிறை மற்றும் சந்தேகக் கைதிகளிடமிருந்து அலுவலர்களால் கைப்பற்றப்பட்ட மீண்டும் உரிமையாளர்களுக்கு ஒப்படைக்க வேண்டிய காசு மற்றும் பெறுமதியான பொருட்கள் அடையாளம் காணக்கூடியவாறு வேறுபிரித்து உரிமையாளரின் பெயர், பதிவு இலக்கம் ஆகியவற்றை எழுதி லேபல் செய்து பாதுகாப்புப் பெட்டகத்தில் வைக்கப்பட்டிருக்கவில்லை	சிறைச்சாலை கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் பின்பற்றப்படுதல் வேண்டும்.
2.4 (ஆ)	சிறைக் கூலி மற்றும் சொந்தக் காசு சிறைக்கைதிகளின் தனிப்பட்ட வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்படாமல் வைப்புக் கணக்கினுள் உள்ளடக்கப்படடிருத்தல்	சிறைக்கைதிகளுக்கு தனிப்பட்ட வங்கி கணக்குகளைத் திறந்து சிறைக் கூலிகளை மேற்படி கணக்குகளில் வைப்புச் செய்தல் மற்றும் விடுதலையாகும் போது அந்த நிதியை அவர்களுக்கு கையளித்தல் வேண்டும்.
3.1.2	2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி 101 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்ட சிறைச்சாலை தகவல் முகாமைத்துவ முறைமையை அனைத்து சிறைச்சாலை நிறுவனங்களிலும் நடைமுறைப்படுத்துவதற்குத் தவறியமை.	தகவல் முறைமை விரைவில் அனைத்து சிறைச்சாலை நிறுவனங்களிலும் நடைமுறைப்படுத்தி எதிர்பார்க்கப்படுகின்ற பெறுபேறுகளை அடைந்து கொள்ளல் வேண்ம்.
3.4. (அ)	நிதி ஒழுங்குவிதி 110 இன் ஏற்பாடுகளுக்கமைய சேதம் பற்றிய ஆவணம் இற்றைப்படுத்தி பேணிவரப்படாமை	நிதி ஒழுங்குவிதி பின்பற்றப்படுத்ல வேண்டும்.

1.6. நிதிக் கூற்றுக்கள் தொடர்பாகக் கருத்துக்கள் தெரிவித்தல்.

1.6.1. நிதிச் செயலாற்றுகைக் கூற்று.

1.6.1.1. மீண்டெழும் செலவுகள்.

2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு மீண்டெழும் செலவுகளின் மொத்தம். 5,759,000,739 ரூபா என்ற போதிலும் ஏசீஏ - 2 படிவத்தில் மீண்டெழும் செலவுகள் 5,756,359,923 ரூபா எனக் காட்டப்படடிருந்தமையால் அப்படிவத்துக்கு ஏற்ப செலவுகளின் மொத்தக் கூட்டுத் தொகை 2,640,815 ரூபா குறைவாகவும் தேறிய பெறுபேறு (மீதி) 2,640,815 ரூபா அதிகமாகவும் காட்டப்பட்டிருந்தது.

1.6.2. நிதி நிலைமை தொடர்பான கூற்று

1.6.2.1 . நிதி அல்லாத சொத்துக்கள்.

சிறைச்சாலை திணைக்களத்தின் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு நிதி அல்லாத சொத்துக்கள் கூற்றில் காட்டப்பட்டிருந்த .8,942,715,063 ரூபாவுக்கான நிதி அல்லாத சொத்துக்கள் திறைசேரி ஏடுகளுக்கமைய 9,024,535,834 ரூபா என்பதால் 81,820,771 ரூபா வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது. மேலும் அதன் உண்மைத் தன்மையை உறுதி செய்து கொள்வதற்கு விரிவான அட்டவணைகள் கணக்காய்வின் போது சமர்ப்பிக்கப்படவில்லை.

1.6. 3. கணக்காய்வுக்கான சான்றுகள் இல்லாமை.

நாடு பூராகவும் 30 சிறைச்சாலை நிறுவனங்கள் அமையப்பெற்றுள்ள மிகப் பாரிய எண்ணிக்கை அலகுகளையும் மற்றும் அதிக பெறுமதி கொண்ட நிகழ்நிலைப்படுத்தப்பட்ட நிலையான சொத்துக்கள் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

2. நிதி மீளாய்வு

2.1. செலவு முகாமைத்துவம்

பின்வருன அவதானிக்கப்பட்டன.

(அ) மீண்டெழும் செலவுகள் 02 விடயங்களுக்காக குறித்தொதுக்கப்படடிருந்த 38,000,000 ரூபா மதிப்பீடு செய்யப்பட்ட ஒதுக்கீட்டில் 18,828,107 ரூபா ஒதுக்கீடு மீதியாக காணப்பட்டதோடு அது ஒவ்வொரு செலவு விடயங்களின் மீதி நூற்றுக்கு 63 மற்றும் நூற்றுக்கு 47 ஆகக் காணப்பட்டது.

(ஆ) மீண்டெழும் செலவுகள் 02 விடயங்களுக்காக குறித்தொதுக்கப்பட்டிருந்த 84,100,000 ரூபா குறைநிரப்பு ஒதுக்கீட்டில் 33,759,375 ரூபா ஒதுக்கீடு மீதியாக காணப்பட்டதோடு அது ஒவ்வொரு செலவு விடயங்களின் மீதி நூற்றுக்கு 29 மற்றும் நூற்றுக்கு 99 ஆகக் காணப்பட்டது.

(இ) மீண்டெழும் செலவுகள் 06 விடயங்களுக்காக நிதி ஒழுங்குவிதிகள் 66/69 இன் கீழ் மாற்றப்பட்டிருந்த 90,500,000 ரூபா ஒதுக்கீட்டில் 32,356,629 ரூபா ஒதுக்கீடு மீதியாக காணப்பட்டதோடு அது ஒவ்வொரு செலவு விடயங்களின் மீதியாகக் காணப்பட்ட நூற்றுக்கு 25 மற்றும் நூற்றுக்கு 95 ஆகக் காணப்பட்டது.

(ஈ) மூலதனச் செலவு 03 விடயங்களுக்காக குறித்தொதுக்கப்பட்டிருந்த 108,500,000 ரூபா ஒதுக்கீடுகளிச் மூலம் 99,907,654 ரூபா தொகைக்கான ஒதுக்கீடு இலக்கிடப்பட்டிருந்த பணிக்காக செலவு செயயப்பட்டிருக்கவில்லை. அந்த ஒதுக்கீட்டு மீதித் தொகை சதவீதம் நூற்றுக்கு 26 மற்றும் நூற்றுக்கு 100 ஆகக் காணப்பட்டது.

(இ) மூலதனச் செலவு 04 விடயங்களுக்காககப் பெறப்பட்டிருந்த .370,000,000 ரூபா குறைநிரப்பு ஒதுக்கீட்டில் மற்றும் மூலதன 05 செலவு விடயங்களுக்காக நிதி ஒழுங்குவிதிகள் 66/69 இன் கீழ் மாற்றப்பட்டிருந்த 43,000,000 ரூபா ஒதுக்கீடுகளில் முறையே 321,126,255 ரூபா மற்றும் 37,553, 697 ரூபாத் தொகைகள் மீதியாக காணப்பட்டதோடு அது ஒவ்வொரு செலவு விடயங்களின் மீதியாகவுள்ள தொகைகளின் சதவீதம் நூற்றுக்கு 27 முதல் நூற்றுக்கு 100 வரையான இடைவெளியில் காணப்பட்டது

2.2. <u>பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளுக்கு வருதல்</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கடப்பாடு மற்றும் பொறுப்புகள கூற்று திறைசேரியினால் வழங்கப்படுகின்ற கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் கூற்றுடன் இணங்கியிருக்க வேண்டுமெனினும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த 257,799,701 ரூபா கடப்பாடு மற்றும் பொறுப்புகள் பெறுமதி திறைசேரியின் புத்தகத்திற்கமைய 435,234,914 ரூபாவாகக் காணப்பட்டமையினால் .177,435,233 ரூபா வித்தியாசமொன்று காணப்பட்டது.

(ஆ) நிதி ஒழுங்கு விதி 94/ (2) மற்றும் **(3)** இன் பிரகாரம் செய்யப்பட்ட கடப்பாடு நிதிக் கூற்றுக்கமைய .494,406,145 ரூபாவாக காணப்பட்டபோதிலும் திணைக்களதின் ஏடுகளுக்கமைய .507,497,477 ரூபாவாகக் காணப்பட்டதால் 13,091,032 ரூபா வித்தியாசமொன்று காணப்பட்டது.

(இ) நிதி ஒழுங்குவிதி 94/ (1) இன் ஒழுங்கு விதிக்கு முரணாக 04 செலவு விடயங்களுக்காக 5,951,798 ரூபா மீதிக்கு மேற்பட்டதாக 13,223,721 ரூபா பொறுப்புக்களுக்கு கடப்பாடுடையதாகக் காணப்பட்டது.

2.3 . <u>பிரதான கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலரினால் செய்யவேண்டிய சான்றுப்படுத்தல்</u>.

நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கையிடும் போது அந்த சொத்துக்களின் பிரதான பேரேட்டு மீதிப் பெறுமதி தனிப்பட்ட சொத்துக்கள் பெறுமதியுடன் இணங்குகின்றதென்பதை பிரதான கணக்கீட்டு அலுவலரால் உறுதி செய்வதற்காக ஏசீஏ 06 ஆம் இலக்கப் படிவம் தாயரிக்கப்பட்டிருக்கவில்லை.

2.4 - <u>சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு இணங்காமை</u>

பின்வரும் இணக்கம் இன்மைகள் அவதானிக்கப்பட்டன.

	சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகள் தொடர்பு	இணக்காமை
(அ)	நியதிச்சட்ட ஏற்பாடுகள்	
	(i). 1877 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சிறைச்சாலை கட்டளைச் சட்டம்.	நீர்கொழும்பு சிறைச்சாலையின் 16 ஆம் வாட்டில் 18,853 சதுர அடியினுள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சிறைப்படுத்தி வைக்கக் கூடிய சிறைக்கைதிகளின் எண்ணிக்கை 350 என்ற போதிலும். மாதிரி பரிசீலணைக்கமைய 2019 ஆம் ஆண்டில் 05 சந்தர்ப்பங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறைக்கைதிகளின் எண்ணிக்கை 1,783 , 1,843 , 1,727 , 1,773 மற்றும் 1,695 ஆகும்.
		களுத்துறை சிறைச்சாலையின் 22 ஆம் வாட்டில் 17,126 சதுர அடியினுள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சிறைப்படுத்தி வைக்கக் கூடிய சிறைக்கைதிகளின் எண்ணிக்கை 317, என்ற போதிலும். மாதிரி பரிசீலணைக்கமைய 2019 ஆம் ஆண்டில் 06 சந்தர்ப்பங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறைக்கைதிகளின் எண்ணிக்கை 1,159 , 1,294, 1,276 , 1,415 , 1,358 மற்றும் 1,411 ஆகும்..
	(ii). 1877 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சிறைச்சாலை கட்டளைச் சட்டத்தின் (54 பந்திக்கு) 1956 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் 178 ஆம் பந்தி.	சிறைச்சாலையில் இட வசதி காணப்படுகின்றவாறு ஒவ்வொரு வகைக்கும் உரிய சிறைக்கைதிகளை தனித் தனியாக தடுத்து வைக்க வேண்டுமென்ற போதிலும் நீர்கொழும்பு, களுத்துறை சிறைச்சாலைகளில் நிலவுகின்ற கடும் இட நெருக்கடி காரணமாக அவ்வாறு வகைப்படுத்தி தடுத்து வைக்க முடியாது காணப்பட்டது.
	(iii). 1877 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சிறைச்சாலை கட்டளைச் சட்டத்தின் 107 ஆம் பந்தி	2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி களுத்துறை சிறைச்சாலையில் சிறை மற்றும் சந்தேக கைதிகளிடமிருந்து அலுவலர்களால் கைப்பற்றப்பட்ட 123,653 ரூபா பணம் மீண்டும் அவர்களுக்கு கையளிக்க வேண்டுமெனினும் அந்தப் பணம் இலகுவாக இனங்காணத்தக்க வகையில் வெவ்வேறாக பொதிகளில் இடப்பட்டு சிறை.∴ சந்தேக கைதிகளின் பெயர், பதிவு இலக்கம் சகிதம் லேபல் செய்து பொறியிட்டு பாதுகாப்புப் பெட்டகத்தில் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கபட்டிருக்கவில்லை.

(ஆ)	**இலங்கை சனநாக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள் கோப்பு**	-
	(i). நிதி ஒழுங்கு விதிகள் 802 (1), (2)	நீர்கொழும்பு சிறைச்சாலையின் வாகனங்கள் தொடர்பாக பொறுப்பு வகிக்கும் அதிகாரிகள் அவற்றின் பாவனை மற்றும் பராமரிப்பு தொடர்பாக முறையாக நிருவாகம் செய்யாமை மற்றும் அந்தப் பணிகளின் போது முறையான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை
	(ii). நிதி ஒழுங்கு விதி 758 (1)	வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்புக்கு மேலதிகமாக திணைக்களத் தலைவர் / பணிப் பொறுப்பு அலுவலர் ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையேனும் பொருட்கள் ஆவணத்தை உறுதிச் சீட்டுடன் ஒப்பிட்டுப் பார்த்து பொருட்கள் ஆவணங்கள், புத்தகங்களைப் பரிசீலனை செய்து , மொத்தக் கையிருப்புக்கள், மீதி மற்றும் கையின் உள்ள பொருட்கள் ஒரு சிலவற்றை சரி பிழை பார்த்தல் அதன் முடிவுகளை திறைசேரி 127 படிவத்தில் பதிவு செய்தல் வேண்டும் எனினும் நீர்கொழும்பு சிறைச்சாலையில் அவ்வாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
	(iii). நிதி ஒழுங்கு விதி 565	சகல வைப்புக்களதும் அன்றாடக் கிடைப்பனவு மற்றும் அன்றாடக் கொடுப்பனவுகளின் மொத்தம் பதிவு செய்யப்பட்டு மாதாந்தம் சமநிலைப் படுத்தப்படடிருக்க இல்லை என்பதோடு 2019 நிதியாண்டுக்காக வைப்புப் பேரேட்டில் ஒவ்வொரு கணக்குகளின் மீதிகள் கூட்டப்பட்டிருக்கவில்லை, ஒவ்வொரு விடயமும் தனித் தனியாகப் புதிய பேரேட்டில் விபரமாக உள்ளடக்கப்படாமை மற்றும் வைப்புப் பேரேட்டில் பணம் வைப்புச் செய்த திகதி மற்றும் மீளச் செலுத்திய திகதி குறிப்பிடப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.
(இ)	**சிறைச்சாலை நிரந்தரக் கட்டளை 519, 521**	எந்தவொரு மரகக்கறி வகையையும் ஒரு வாரத்தினுள் 03 நாட்களுக்கு கூடுதலாக வழங்கக்கூடாது மற்றும் வாரத்திற்கு ஒரு தடவைக்கு மேல் பூசணிக்காய், சுரக்காய் வகை மரக்கறிகள் வழங்கப்படக் கூடாதெனினும் அதற்கு அமைவாகநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படடிருக்கவில்லை

(ஈ)	**2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதிய அரசாங்க சேவை ஆணைக் குழுவின் 109 ஆம் இலக்க ஒழுங்கு விதி**	உரிய தினத்தில் அனைத்துத் தேவைப்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள போதிலும் அலுவலர் ஒருவரின் நியமனம் நிரந்தரத் தன்மையை அடைவது குறித்த நியமன அலுவலர் மூலம் சேவை நிரந்தரம் செய்யப்பட்டுள்ளதாக முறையான கடிதமொன்று வழங்கப்பட்டதன் பின்னர் மாத்திரமே என்ற போதிலும் தகவல் சமர்ப்பித்த 30 சிறைச்சாலை நிறுவனங்களில் 17 சிறைச்சாலை நிறுவனங்களின் மொத்த உத்தியோகத்தர்கள் 437 பேரில் 1998 தொடக்கம் 2017 ஆண்டு வரை நிரந்தர நியமனம் பெறுவதற்குத் தகைமை பெற்ற அதாவது 57 பதவிகளின் 251 உத்தியோகத்தர்களை நிரந்தர செய்வதற்காக முறையான கடிதம் வெளியிடப்பட்டிருக்கவில்லை. மேலும் 05 சிறைச்சாலை நிறுவனங்களிற்கு 2009 - 2017 ஆண்டு வரை தகைமைகள் சகிதம் நியமனம் பெற்ற 53 உத்தியோகத்தர்களின் தனிப்பட பெயர் வழிக் கோப்புகள் கூட தயாரிக்கப்படடிருக்கவில்லை. 11 சிறைச்சாலை நிறுவனங்களுக்கு 2008 - 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் நியமனம் செய்யப்பட்ட 34 உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட பெயர் வழிக் கோப்புக்களைப் இற்றைப்படுத்தி சேவையை நிரந்தரப்படுத்தி உரிய பயிற்சி வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருக்கிவில்லை, 11 சிறைச்சாலை நிறுவனங்களின் 2005 - 2017 ஆம் ஆண்டு வரை நியமனம் பெற்ற, இடமாற்றம் பெற்ற 37 உத்தியோகத்தர்களின் கடிதக் கோப்புகளைத் தயாரித்து உரிய நிறுவனங்களுக்கு அனுப்பி வைப்பதற்கும், பதவிகளை நிரந்தரப்படுத்துவதற்காக நியமன அலுவலருக்கு அனுப்பிவைப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(உ)	**அரசாங்க பெறுகை வழிகாட்டல் கோப்பு**	-
	(i). 2.8.1 (அ) ஆம் பந்தி	எந்தவொரு அங்கத்தவரும் பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு ஆகிய இரு குழுக்களிலும் பணியாற்றக் கூடாது என்ற போதிலும் களுத்துறை சிறைச்சாலை அத்தியட்சகர் குறித்த இரு குழுக்களிலும் பணியாற்றியிருந்தார்.
	(ii). 2.14.1 ஆம் பந்தி	சந்தை விலை ஒப்பீட்டு முறைமையின் கீழ் பொருட்கள் பெறுகைக்காக பொறியிடப்பட்ட விலை கோரல் 5 மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ)	**271/2019 ஆம் இலக்க 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 03 ஆம் திகதிய அரசாங்கக் கணக்குகள் சுற்றறிக்கை**	-
	(i). 6 ஆம் பந்தி	மீண்டெழும் செலவு விடயங்கள் 09 மற்றும் மூலதன செலவு விடயங்கள் 06 இடையில் மாற்றம் செய்யப்பட்டிருந்த ஒதுக்கீட்டுத் தொகை முறையே 148, 000,000, ரூபா மற்றும் .43,000,000 ரூபாத் தொகைகள் ஏசீஏ - 02 படிவததில் உள்ளடக்கப்படடிருக்கவில்லை.

2.5 <u>முற்பணம் வழங்குதல் மற்றும் செலுத்திச் சீராக்கம் செய்தல்</u>

சிறைச்சாலையின் பல்வேறு பணிகளுக்காக 13 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட 164,480 ரூபா முற்பணம் தொகையில் மீதமடைந்த 33,580 ரூபாத் தொகை நிதி ஒழுங்கு விதி **371 (2)** மற்றும் 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 14 ஆம் திகதிய 3/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் முதலாம் பந்தியின் பிரகாரம் பணி நிறைவு செய்யப்பட்டவுடன் ஈடு செய்யப்படல் (செலுத்தி சீராக்கம் செய்தல்) வேண்டுமெனினும் அவ்வாறு ஈடு செய்யப்பட வேண்டிய அத்திகதிக்கு அப்பால் 03 நாட்கள் தொடக்கம் 72 நாட்களுக்கு இடைப்பட்ட காலம் தாமதமாக மீளச் செலுத்தியுள்ளமை காரணமாக அரச நிதி துஷ்பிரயோகத்திற்கு இடமளிக்கப்பட்டிருந்தமையும், 06 அலுவலர்களுக்கு 14 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த 131,525 ரூபா இடைக்கால கட்டு நிதி செலுத்தி ஈடுசெய்வதற்கு முன்னதாக மேலும் 139,075 ரூபா இடைக்கால கட்டுநிதியாக வழங்கப்பட்டிருந்தது.

2.6. <u>வைப்புக்கள்</u>.

மீளாய்வு வருடத்தின் இறுதித் திகதிக்கு பொது வைப்புக் கணக்குகள் 08 இன் மீதிகளின் மொத்தம் 118 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டதோடு அதில் 03 கணக்குகளின் 2 வருடங்களைத் தாண்டிய நிதி ஒழுங்கு விதி 571 இன் பிரகாரம் நடவடிக்கையெடுக்கப்படாத 538,246 ரூபா வைப்புக்கள் மீதியும், சிறைக் கைதிகளின் தனிப்பட்ட வங்கி கணக்குகளிற்கு மாற்றம் செய்வதற்கு நடவடிக்கையெடுக்கப்படாமை காரணமாக 6000/0000/00/0006/0081/000 ஆம் இலக்க கணக்கின் மீதி 228,197 ரூபாவாகவும் காணப்பட்டது.

2.7 <u>வங்கிக் கணக்குகளை வழிநாடாத்தல்</u>.

2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு 13 வங்கி கணக்குகளுக்காக வழங்கப்பட்டிருந்த, வழங்கப்பட்ட திகதி தொடக்கம் 06 மாதங்கள் கழிந்த வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத 81,835 ரூபாத் தொகைக்குரிய காசோலைகள் தொடர்பாக நிதி ஒழுங்கு விதி 396 (ஈ) பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3. <u>செயற்பாட்டு மீளாய்வு மற்றும் செயலாற்றுகை</u>.

முன்வைக்கப்படுகின்ற நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக செயற்பாட்டு மீளாய்வு, பேண்தகு அபிவிருத்தி, நல்லாட்சி மற்றும் மனித வள முகாமைத்துவத்திற்கு உரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.1 பந்தியின் குறிப்பிடப்பட்டுள்ள 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கையின் உள்ளடக்கப்படும்.

அத்தியாயம் 04 - செயலாற்றுகை சுட்டிகள்

4.1. நிறுவனத்தின் செயலாற்றகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)

	குறிப்பீட்டு சுட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%)உண்மையான வெளியீடு		
		100 % - 90 %	**75 % - 89 %**	**50 % - 74 %**
1	பல்லேகல சிறைச்சாலை நிருமாணித்தல் கருத்திட்டத்தின் நிதி முன்னேற்றம்.	99 %	-	
2	யாழ்ப்பாண சிறைச்சாலை நிருமாணித்தல் கருத்திட்டத்தின் நிதி முன்னேற்றம்.	-	77 %	-
3	சிறைச்சாலை நிறுவனங்களின் பழுதுபார்ப்பு (திருத்த) நடவடிக்கைகளுக்காக குறித்தொதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளின் உபயோகம்.	-	-	66 %
4	சிறைச்சாலைத் திணைக்களத்திடமுள்ள வாகனங்களின் பழுதுபார்ப்பு (திருத்த) நடவடிக்கைகளுக்காக குறித்தொதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளின் உபயோகம்.	-	79 %	-
5	சிறைச்சாலை அலுவலர்களின் திறன் விருத்தி (உள்நாட்டு / வெளிநாட்டுப்) பயிற்சிகளுக்காக குறித்தொதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளின் உபயோகம் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளல்.	-	-	73.7 %
6	சிறைக்கைதிகளின் பயிற்சிகளுக்காக குறித்தொதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளின் உபயோகம் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளல்.	93.1 %	-	-

அத்தியாயம் 05 – பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை

5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை சுட்டிக்காட்டுக.

இலக்கு / குறிக்கோள்	இலக்குகள்	அடைவுக் குறி காட்டிகள	இதுவரை அடையப் பெற்ற முன்னேற்றம்		
			0 % - 49 %	**50 % -74%**	**75 % - 100 %**
16. பேண்தகு அபிவிருத்திக்காக சமாதானமான மற்றும் முழுமையான ஒரு சமூகத்தை உருவாக்குவதற்கும், நீதிக்காக அனைவரும் சம சந்தர்ப்பம் வழங்குதல் மற்றும் ஒவ்வொரு மட்டங்களிலும் பயனுள்ள பொறுப்புடன் கூடிய பூரணத்துவம் கொண்ட நிறுவனங்களைக் கட்டியெழுப்புதல்.	16.2 அனைவருக்கும் சட்டத்தின் நியாயத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முடிதல் மற்றும் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் சட்டத்தின் ஆதிக்கத்தை ஊக்குவித்தல்.	16.3..2 மொத்த சிறைக்கைதிகளின் எண்ணிக்கையில் தண்டனை விதிக்கப்படாத சிறைக்கைதிகனின் அளவு. .			79.8 %

5.2 . பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதன் வெற்றிகளையும் மற்றும் சவால்களையும் சுருக்கமாக விபரிக்குக.

தண்டனை விதிக்கப்படாத சிறைக்கைதிகள் என்பது சட்டத்தினால் குற்றவாளிகளாக்கப்படாத சந்தேக நபர்களாவர். இலங்கை சிறைச்சாலைகளின் புள்ளி விபர ஆவணங்கள் - 2020 இன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் வருடாந்த சிறை மற்றும் சந்தேக கைதிகள் 144,489 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளதோடு அவற்றில் 29,164 சிறைக்கைதிகளும் 115,325 சந்தேக நபர்களும் அடங்கும். அதாவது மொத்த வருடாந்த அனுமதிப்பில் 79.8 % சந்தேக நபர்களாவர். வருடாந்த சிறை : சந்தேகம் விகிதம் 1 : 4 ஆகும்.

சிறைக்கைதிகளின் சனத்தொகை மற்றும் சந்தேக நபர்களின் சனத்தொகை என்பவற்றுக்கிடையில் இடைவெளி அதிகரிப்பதன் மூலம் குற்றச் செயல்கள் சார்ந்த நீதி முறைமையின் நம்பிக்கைக்கு ஏதோவொரு தடை உள்ளதென்பதை சமூகத்திற்கு வெளிப்படுத்துகின்றது. ஆதலால் இந்த இடைவெளையைக் குறைத்துக் கொளவதற்காக தேவையான நடவடிக்கைகளை இது தொடர்பாக சிறந்த முறையில் ஆாய்ந்து உரிய சகல தரப்புக்களதும் பங்களிப்புடன் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மேலும் இந்த விளக்கமறியல் தொகையைக் கட்டுப்படுத்தல் சிறைச்சாலை திணைக்களத்தின் நிருவாகத்திற்கு அப்பாற்பட்ட காரணங்களின் மீது அடிப்படையாகவுள்ளது.

1. தீர்க்கப்படாத வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்தல் மற்றும் தொடர்ச்சியாக வழக்குகள் பிற்போடப்படுதல்.
2. இரசாயனப் பரிசோதனை அறிக்கைகள் தாமதமடைதல்.
3. பிணை வைப்புச் செய்ய முடியாமை.
4. பிணைச் சட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப்படாமை

போன்ற இத் திணைக்களத்திற்கு கட்டுப்படுத்த முடியாத விடயங்களின் மீது இந்த அதிகரிப்பு ஏற்படுகின்றமையால் எதிர்பார்க்கப்படுகின்ற முன்னேற்றத்தை அடைந்து கொள்ள முடியாமைக்குக் காரணமாகவுள்ளது.

அதே போன்று சிறைச்சாலை சந்தேக நபர்கள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வது சிறைச்சாலை திணைக்களத்திற்குள்ள பிரதானமான ஒரு சவாலாகும். இலங்கை சிறைச்சாலைகள் புள்ளி விபர ஆவணங்கள் - 2020 வெளியீட்டுக்கு அமைய 2019 ஆம் ஆண்டில் அன்றாட நடுத்தர ரிமான்ட் தொகை 14,390 ஆகும் என்பதோடு ஏற்றுக் கொள்ளப்பட்ட தரங்களுக்கமைய ரிமான்ட சிறைச்சாலைகளினுள் தடுத்துவைப்பதற்கு சாத்தியம் காணப்படுகின்ற சந்தேக கைதிகளின் எண்ணிக்கை 5,034 ஆகும். நிலவுகின்ற அதிகரித்த ரிமான்ட தொகை காரணமாக அது 285.85 % இட நெரிசலைக் வெளிகாட்டுகின்றது .

அதிகமான ரிமான்ட் சிறைச்சாலை நிறுவனங்கள் மிகப் பழையவை என்பதோடு நகர்ப் புரம் சார்ந்த நீதிமன்ற அமைவு மற்றும் அவற்றை விஸ்தரிப்பதற்குத் தேவையான போதுமானளவு இடவசதி இல்லாமை காரணமாக கைதிகளுக்கு குறைந்த தரத்திலான தங்குமிட வசதிகளை வழங்குதல் மற்றும் காணப்படுகின்ற கைதிகள் வகைக்கு ஏற்ப சுகாதார துப்புரவேற்பாட்டுச் வசதிகள் மற்றும் ஏனைய சேவைகளை வழங்குதல் என்பன பாரிய சவாலாகக் காணப்படுகின்றது

அத்தியாயம் 06 - மனித வள விபரம்

6.1 - பதவியணியினர் முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்	தற்போதுள்ள பதவியணி	பதவிவெற்றிடம் / (அதிகப்படியான) **
சிரேட்ட	142	65	77
மூன்றாம் நிலை	148	88	60
இரண்டாம் நிலை	7163	5193	1970
ஆரம்ப நிலை	419	324	95

06.2 பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை சுருக்கமாகக் குறிப்பிடுக.

சிறைச்சாலை திணைக்களத்திற்காக 7872 அலுவலர்கள் அனுமதிக்கப்பட்டுள்ள போதிலும் தற்போது 2000 இற்கு மேற்பட்ட எண்ணிக்கையான அலுவலர்களின் வெற்றிடம் நிலவுகின்றது. அவ்வாறே அவற்றிற்கிடையே சிறைக்காவலர், சார்ஜன்ட் போன்ற பதவிகளின் வெற்றிடங்கள் அதிகமாகக் காணப்படுவதோடு அதற்கு காரணமாக ஒவ்வொரு சிறைச்சாலை நிறுவனங்களிலும் அந்தப் பதவிகளுக்கான அலுவலர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அவ்வாறே அலுவலர் வெற்றிடங்கள் காணப்படல் மற்றும் அதன் காரணமாக பெரும்பாலான அலுவலர்களுக்கு (விசேடமாக திணைக்களத அடிப்படை அலுவலர்களுக்கு) இரட்டைக் கடமை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு நேரிடுகின்றமை பாரிய பிரச்சினையாகும். இந்த வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பாக பெரும்பாலான பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பணிகள் நடைபெற்றுவருவதோடு அதில் இரண்டாம் தர ஜெயிலர், இரண்டாம் தர புணர்வாழ்வு அலுவலர், சிறைக்காவர் போன்ற பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்குரிய நேர்முகப் பரீட்சை நடவடிக்கைகள் பெரும்பாலானவை தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளன. இருந்த போதிலும் அனைத்து ஆட்சேர்ப்புச் செய்தல் நடவடிக்கைகளும் தேர்தல் ஆணைக்குழுவின் செயலாளரது EC/ EDR/ PRE - 2019 ஆம் இலக்க மற்றும் 2019.09.18 ஆம் திகதிய, நிதி அமைச்சின் செயலாளரின் DMS/ policy/ Recruitments ஆம் இலக்க மற்றும் 2019.11.20 ஆந் திகதிய கடிதத்துக்கு அமைய தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதோடு தற்போது மீண்டும் இந்த ஆட்சேர்ப்புக்களுக்குரிய எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான அனுமதி கோரப்பட்டுள்ளது.

சிறைச்சாலை திணைக்களம் தற்போது பாரியளவு அலுவலர் பற்றாக்குறையுடன் அன்றாடப் பணிகளை மேற்கொண்டு வருகினறது. இந்த அலுவலர் பற்றாக்குறை காரணமாக சில சந்தர்ப்பங்களில் உத்தியோகத்தர்கள் பல நாட்கள் தொடர்ச்சியாக பணியில் ஈடுபடுகின்ற சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. மேலும் சிறைச்சாலை நிறுவனங்களினுள் அத்தியவசியக் கடமை நிலையங்களுக்கு கூட கடமையில் ஈடுபடுத்த அலுவலர்கள் இல்லை என்பதோடு சில நாட்களில் சிறைச்சாலையினுள் கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு ஒன்று அல்லது இரண்டு அலுவலர்கள் உள்ள சந்தர்பங்களும் காணப்படுகின்றன. இந்த நிலைமையினுள் சிறைச்சாலை சிறைக்கைதிகளின் செயற்பாடுகளை முறையாக மேற்பார்வை செய்வதற்கு அல்லது அவதானிப்பு செய்வதற்கு ஒருபொதும் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. சிறைச்சாலை நிறுவனங்களின் இடம்பெற்றதாக மற்றும் இடம்பெறுவதாக அறிக்கையிடப்படுகின்ற பெரும்பாலான சம்பவங்கள் நிகழ்ந்திருப்பது அல்லது நிகழ்வது போதுமானளவு அலுவலர்கள் தேவையான கடமை நிலையங்களுக்கு மற்றும் கடமைகளுக்கு ஈடுபடுத்த முடியாமையினால் என்பதை சிறந்த முறையில் பகுப்பாய்வு செய்யும் போது தெளிவாகின்றது. மேலும் அலுவலர் பற்றாக்குறை காரணமாக ஒரே அலுவலருக்கு ஒரு நாளையினுள் நிறைவேற்ற முடியாத அளவிலான கடமைகள் அளவொன்று கையளிக்கப்படுகின்றன. அந்த நிலைமையினுள் ஒரு கடமை கூட சிற்பாக இடம்பெறுவதில்லை என்பதோடு அலுவலர் பாரியளவான் தொழில் அழுத்தத்திற்கு மற்றும் தொழில் திருப்பதியின்மைக்கும் உட்படுகின்றார். அந்த நிலைமை நிறுவனத்தின் செயலாற்றுகையின் வீழ்ச்சிக்கு பெரிதும் தாக்கம் செலுத்துகின்றது.

6.3. மனித வள அபிவிருத்தி

நிகழ்ச்சித திட்டத்தின் பெயர்	பயிற்றப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை	நிகழ்ச்சித் திட்டக் காலப் பகுதி	மொத்த முதலீடு (ரூபா)		நிகழ்ச்சித் திட்டத்தின் இயல்பு	நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்
			உள்நாட்டு	வெளிநாட்டு		
சிறைச்சாலை தகவல் முகாமைத்துவ முறைமை பயிற்சிச் செயலமர்வு .	36	03 நாட்கள்	0.0318	-	உள்நாட்டு	சிறை/ சந்தேக கைதிகளின் தகவல்கள் மற்றும் தரவுகளை முறையாகப் பேணிவருதல் மற்றும் மேற்படி தரவுகளை கணினி முறைமையில் (PIMS) உள்ளீர்ப்புச் செய்தல். .

ஆங்கிலம் டிப்ளோமா பாடநெறி (தொழில் சார்ந்த) - மிலோதா நிறுவனம் - நிருவாக அலுவலர் திரு. சி. எஸ் .அமரவிக்கிரம்	1	12 மாதங்கள்	0.075	-	உள்நாட்டு	தொழில் நடவடிக்கைகளுக்குத் தேவையான ஆங்கில மொழி அறிவைப் பெற்றுக் கொள்ளல்.
சிறைச்சாலை தகவல் முகாமைத்துவ முறைமை பயிற்சிச் செயலமர்வு	12	01 நாள்	0.0106	-	உள்நாட்டு	சிறை/ சந்தேக கைதிகளின் தகவல்கள் மற்றும் தரவுகளை முறையாகப் பேணிவருதல் மற்றும் மேற்படி தரவுகளை கணினி முறைமையில் (PIMS) உள்ளீர்ப்புச் செய்தல். .
சிறைச்சாலையினுள் ஏதேனுமொரு சம்பவத்தின் போது அலுவலர்கள் செயற்பட வேண்டிய விதம் தொடர்பாக அறிவூட்டும் செயலமர்வு	120	02 நாட்கள்	0.01	-	உள்நாட்டு	சிறைச்சாலையினுள் ஏற்படச்கூடிய அவசர கலவரம் அல்லது அவசர சந்தர்ப்பத்தில் அலுவலர்கள் செயற்படவேண்டிய முறை பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ளல்.
மனித வள முகாமையாளரொருவரின் வகிபாகம் (தேசிய ஊழியக் கல்வி நிறுவனம்)	3	01 நாள்	0.0255	--	உள்நாட்டு	மனித வளங்களை உரிய முறையில் முகாமைத்துவம் செய்வது கடமை அலுவல்களுக்கு முக்கியத்துவம் பெறுகின்ற முறை பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ளல்.

சிறைச்சாலை தகவல் முகாமைத்துவ முறைமை பயிற்சிச் செயலமர்வு	12	01 நாள்	0.0106	-	உள்நாட்டு	சிறை/ சந்தேக கைதிகளின் தகவல்கள் மற்றும் தரவுகளை முறையாகப் பேணிவருதல் மற்றும் மேற்படி தரவுகளை கணினி முறைமையில் (PIMS) உள்ளீர்ப்புச் செய்தல். .
முகாமைத்துவ முறைமை பயிற்சிச் செயலமர்வு	70	01 நாள்	0.0191	-	உள்நாட்டு	அலுவலக நடைமுறைகள் பற்றிய கோட்பாடுகள்/ கோப்புகளை முறையாகப் பேணி வருதல்
தமிழ் மொழிப் பயிற்சிப் பாடநெறி - (அரச கரும மொழிகள் திணைக்களம்) எஸ்.கே.ஐ. லக்மிணி - முகாமைத்துவ உதவியாளர்	1	03 மாதங்கள	0.0075	-	உள்நாட்டு	தமிழ் மொழி பற்றிய பயிற்சிப் பாடநெறி (எழுத்து மூலம் மற்றும் வாய் மொழி மூலம்)
விளைதிறன் (உற்பத்தித் திறன்) எண்ணக்கருவை நடைமுறைப்படுத்தல் தொடர்பான செயலமர்வு	50	01 நாள்	0.0100	-	உள்நாட்டு	தொழில் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையில் விளைதிறன் (உற்பத்தித் திறன்) எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றது என்பதைத் தெளிவு படுத்தல்.

விளைதிறன் எண்ணக்கரு தொடர்பான செயலமர்வு (அத்தியட்சகர்கள்/உதவி அத்தியட்சகர்ள்)	80	01 நாள்	0.0546	-	உள்நாட்டு	விளைதிறன் (உற்பத்தித் திறன்) எண்ணக்கரு தொடர்பான அறிவை வழங்குதல்
சிறைச்சாலை தகவல் முகாமைத்துவ முறைமை பயிற்சிச் செயலமர்வு (வெலிக்கடை சிறைச்சாலை அலுவலர்களுக்காக)	6	01 நாள்	0.0081	-	உள்நாட்டு	சிறை/ சந்தேக கைதிகளின் தகவல்கள் மற்றும் தரவுகளை முறையாகப் பேணிவருதல் மற்றும் மேற்படி தரவுகளை கணினி முறைமையில் (PIMS) உள்ளீர்ப்புச் செய்தல். .
